

ஓலை 84 | ஓசை 207 | ஆகஸ்ட் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது**

## பொருள்

**தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி
சிறிதளவாக இருந்தாலும்,
அது உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கப்படும்**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஔவை மொழியில் அமுதப் பாக்கள்

## மரபு பா கற்போம்

## அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!

### பாவகை : கலி மண்டில (விருத்தம்) மண்டிலம்

கோள்களுக்குச் சீர்திங்கள் செங்கதிரே தாய்தந்தை
நீள்வானில் கார்முகில்க்கு வெயில்தென்றல் தாய்தந்தை
நீள்மலையும் அருவியுமே ஆற்றினுக்குத் தாய்தந்தை.
தாள்பதிக்கும் விலங்கிற்கு காடுகளே தாய்தந்தை!

மண்ணுயிர்க்கோ இயற்கையாவும் ஈடற்றத் தாய்தந்தை.
மண்ணுழவர் நெல்வயலின் மாண்புடைய தாய்தந்தை:
எண்ணெழுத்தே இலக்கியத்தின் சீர்மைமிகு தாய்தந்தை
கண்ணுக்குப் பார்வையீயும் கருமணியே தாய்தந்தை!

தொழிலுக்குத் தொழிலாளர் முதலாளித் தாய்தந்தை:
அழியாத கல்விக்கோ ஆசிரியர் தாய்தந்தை:
இழிவற்று ஆட்சியாளர் நாட்டிற்குத் தாய்தந்தை;
பழியின்றி வாழ்வோர்க்கு நன்னடத்தை தாய்தந்தை!

தாய்தந்தை பிள்ளையர்க்குப் பெரிதுவக்கும் முதல்தெய்வம்,
ஆய்ந்துணர்ந்த பிள்ளையர்க்கு வேறில்லை பிறதெய்வம்;
சேய்யாவும் காணுகின்ற கண்கண்ட முதன்மைதெய்வம்,
தாய்தந்தை தமைக்காக்கும் பிள்ளைகளும் சீர்தெய்வம்!



ஆத்திசூடி

(ஔவையார்)




தனது கவிதைகளை
அகர முதல இலக்கியப் பேரவையில்
வெளியிட அனுமதி தந்த
நெருப்பலையார் ஐயாவிற்கு,
பேரவை சார்பாக
மனம் நிறைந்த நன்றி

* கலி மண்டில (விருத்தம்) மண்டிலம். - இலக்கணக் குறிப்பு:

நான்கடி தோறும் ஒவ்வோரடியிலும் நான்கு நான்கு காய்ச்சீர்களாக வந்து அடி தோறும் முடியும். நான்கடியும் ஓரெதுகைப் பெற்று வரும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனைப் பெற்று வருதல் சிறப்பு. ஒவ்வோர் அடியின் ஈற்றுச் சீர் சந்த ஓசைப் பெற்றிருக்கும். ஒவ்வோரடியையும் மாற்றி மாற்றி கீழிருந்து மேலே, மேலிருந்து கீழே வாசித்தாலும் பொருள் மாறாது. ஆகவே, இப்பாடலை கலி மண்டில( விருத்தம்) மண்டலம் என்பர். மேலேயுள்ள பாடலில் பொருளுக்கு முதன்மை கொடுத்து பொழிப்பு மோனைப் பின்பற்றாத பாடல்களாகும்.

நெருப்பலைப் பாவலர் இராம.இளங்கோவன்

# என் மரணம் குறித்து

என் மரணத்தைப்பற்றி
உங்களுக்குச் சொல்லியே ஆகவேண்டும்.
எனக்கு அறிமுகமற்றவர்கள்
தெரியாதவர்களைப்பற்றி
எனக்கு கவலையில்லை.
நெருக்கமானவர்கள்
அறிமுகமானவர்களுக்கு
என் மரணத்தைப்பற்றி
சொல்லவேண்டியது
என்கடமை.



என்மரணம் குறித்த
செய்தியால் நீங்கள்
பாதிக்கப்படலாம்.
என் மரணத்திற்கு வருந்தி
கண்ணீர்ச்சிந்துவீர்கள்.
அதைக் கண்டு
உங்களுக்கு ஆறுதல்
சொல்லமுடியாது என்னால்.

மாலைகள் சூட்டி
மரியாதை செய்வீர்கள்.
எவ்விதச்சங்கடமுமின்றி
என் கழுத்தும் தோளும்
அதைச் சுமக்கத்தொடங்கும்.

இறுதியாய்
மீண்டும் மீண்டும் என்னை
உற்று நோக்கிக் கொள்வீர்கள்.
சிலர் பார்வையில் கருணையும்
ஒருசிலர் பார்வையில் கோபமும்
வழியலாம்.


நானிழைத்த துரோகங்களால்
என்னைச் சபிக்கவும் செய்வீர்கள்.
நான் செய்த நன்மைகளுக்கு
என்னைப் பாராட்டவும் செய்வீர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஓய்வின்றி

உலகில் பிறந்த
உயிர்களின் இதயம்
உடலில் கணமும்
நிற்காமல் தாளமிடும்.
ஓய்வறியாமல் உழைத்தே
ஓடவைக்கும் குருதியை.

உடலின் நாளங்களில்
ஊர்ந்தே பயணிக்கும்.
நெருப்புக் கோளமாய்
நித்தமெரிவது ஆதவன்.
கரைதொடும் அலைகள்
களிப்போடு அலையும்.



வெற்றிடம் இல்லாமல்
வளியும் திரியும்.
எங்கும் பரந்து
ஏகாந்தம் தேடும்.
சூரியனை நாளும்
சுற்றும் கோள்கள்.

புவியோ தன்னையும்
சுற்றியேச் சுழலும்.
வானில் எப்போதும்
விண்மீன்கள் ஒளிரும்.
மனதில் தோன்றும்
எண்ணங்களின் ஓட்டம்.

காட்சியாய் பகலிலும்
கனவாய் இரவிலும்.
விடியலில் துயிலெழும்
விந்தை மாதர்கள்
நாளெல்லாம் தன்னலம்
பாராது உழைப்பு.

நாட்டெல்லைக் காவலர்
கணநேரம் சோரார்.
ஓய்வின்றி உழைத்தலே
ஔடதமாகும் உலகிற்கு.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# சும்மா வந்ததல்ல சுதந்திரம்

ஆழி வழி வந்த அரக்கர்கள்
ஆக்கிரமிப்பு செய்தனர்
என் திருநாட்டை!

கயவர்களின் கைப்பாவையாக
நாங்கள் ஆடும்சமயம்
சுயராஜ்ஜிய சாட்டைகொண்டு
தெளியவைத்தனர் எங்கள் பித்தை !

பகட்டான ஆடைகளுக்கு
நாங்கள் மயங்கி கிடந்தவேளையில்
கைத்தறி ஆடைகொண்டு எங்கள்
கண் திறந்தனர் !

அதிகாரத்திற்கு பயந்து வலைந்த எங்களின்
முதுகெலும்புகளை சரிசெய்யும் வைத்தியத்தில்
எங்கள் முன்னோர்களின் குருதியே மருந்தானது!

வரிக்குதிரைகளின் வரிகளைபோல
தாறுமாறாக எங்களின் மீது விழுந்த வரிகளை
பல வங்கப்புலிகள் தான்
தடவிடுபொடியாக்கினர்!

சும்மா வந்ததல்ல நண்பா
இத்திருநாட்டின் சுதந்திரம்
சில தந்திர நரிகளுக்கு
பல சிங்கங்களை விலைகொடுத்து பெற்றது
இந்த சுதந்திரம்!

ஓடும் நதியில்
குதித்து எழும்
நீர்க்குமிழி போல
தன் சுயமரியாதையை
சீண்டிப்பார்க்கும்
ஒவ்வொரு முறையும்
அவள் வெகுண்டு எழுகிறாள்
ஏது பயன்
குதித்த வேகத்தில்
நீருக்குள் கலந்திடும்
குமிழியாவே வாழ்கிறாள்
குடும்ப அமைப்பை காத்திட



கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# மணிமேகலை


## தொடர்ச்சி 25

24. ஆபுத்திரன் நாடு அடைந்த காதை . ( பாகம் , இரண்டு )

"குலக் கொழுந்து மணிமேகலை வாழ்க்கைக்கு நான் பொறுப்பு
நலமாக வாழ அவளை என்னோடு அனுப்புங்கள்" சித்திராபதி
"குலமகள் அவள் மீண்டும் உன்னோடு வாழ அனுமதியோம்
உலகம் உய்க்கப் பிறந்தவள் என்னுடன் தான் இருப்பாள்" அரசி.

அரசியின் காவலில் மணிமேகலை இருப்பதை அறிந்தாள் மாதவி
தவசியானவள் சிறையில் இருப்பதை தோழி சுதமதியிடம் கூறினாள்
சிரமத்தை உணர்ந்து இருவரும் அறவண அடிகளை வணங்கினர்
வரமாக வந்த மணிமேகலை இருக்கும் இடம் கூறி வருந்தினர் .

அடிகளுடன் மாதவி சுதமதி அனைவரும் அரசியிடம் வந்தனர்
படிஏறி தம்மைக் காணவந்த அறவணரை தொழுது வணங்கினாள்
அடிகளை உயர்ந்த இருக்கையில் அமரச்செய்து சிறப்பு செய்தாள்
அடிகள் பல்லாண்டு வாழ வேண்டும்,"என வாழ்த்தி துதித்தாள்




"தேவியே கேள்" நான் மறையும் மாலைக் கதிரவன் போன்றவன்
ஆவி பிரியும்முன் பிறப்பு மூப்பு பிணி நோய் இறப்பு இது இயற்கை
கூவிக் கதறினாலும் இதில் இருந்து எந்த மனிதனும் தப்ப முடியாது
பிறவி எடுத்தவர்கள் இவற்றை அறிந்து நடந்தால் பெரும் பேறு பெறுவர்.

மூன்று உலகம் மேல், கீழ், நடு , அளவிலா உயிர்கள், இருக்கின்றன
தோன்றும் உயிர்கள் மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய்
ஈன்ற உயிர்கள் இவற்றுள் ஒன்று , தான் செய்த வினைப்பயன்
சான்றாக நல்வினை நல்லவனாக, தீவினை தீயவனாய் பிறப்பான்

தீவினை என்பது யாது என கேட்டால் கொலை. களவு, காமம்
பாவியானவன் உடம்பால் தோன்றும் பாவச்செயல்கள்
தீவினைகள் பொய், புறங்கூறுதல், கடுஞ்சொல், சொல்லால் வருவன
தீவினைகள் பொறாமை, சினம் , மயக்கம் உள்ளத்தால் வருபவை
வினைப் பயன் உணர்ந்த அறிவாளர் தீவினைகள் செய்யார்

குற்றமற்ற நல்லறத்தினையே எந்நாளும் போற்றி நடப்பார்கள்
மற்றதை நினைவில் கொள்ளுங்கள் அரசமாதேவி, சித்திராபதி
சுற்றம் மகிழ நன்மை செய்து வாழுங்கள் என்றார் அடிகள்.
"குற்றமற்ற ஆபுத்திரன் நாட்டை அடைந்து மணிபல்லவம் செல்வேன்"

மணிமேகலை புறப்பட்டு சம்பாபதி கந்திற்பாவை ஆசி பெற்றாள்
துணிவுடன்வான் வழி பறந்து சென்று ஒரு பூஞ்சோலை அடைந்தாள்
பணிவுடன் அங்கு இருக்கும் தருமசாவகனிடம் "இது எந்த ஊர்?"
அணித்து உள்ள இது புண்ணியராசன் ஆளும் நாகபுரம் ," என்றான்
(அணித்து : அருகில்) ( பாகம் இரண்டு முற்றும் )

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# வினைச்செயல் வகை

## அதிகாரம் : 68

வினையாய்ந்து நிலைக்க
முடிவென்பது துணிவாம்.
துணிந்தபின் நாட்கடத்தல்
அடிதரும் குற்றமாம்.

நாட்கடத்தும் செயல்வினையை
நாட்கடத்திச் செய்தலும்.
நொடிநாளில் முடிக்கவேண்டுவன
உடனேயும் செய்தல்நலம்.




இயலுமிடம் எல்லாம்
செயல்முடித்தல் நலம்.
இயலாநிலையில் முடிப்பதற்கான
வழிதேடி ஆய்தல்நலமே.

தொடும்வினை ஒழிக்கும்பகை
இவ்விரண்டின் எச்சமாய்ந்திடின்.
தீயினெச்சம்போல் பெருகி
பெருங்கேடு விளைவிக்கும்.

உற்றபொருள் ஏற்றகருவி
தக்ககாலம் செய்தொழில்.
பற்றியநிலம் இவ்வைந்தினையும்
தெற்றின்றியாய்ந்து செயல்நலமே.

வினைமுடிக்கும் வகையும்
பின்வரும் இடையூறும்.
முடிவில்வரும் பெரும்பயனும்
ஆய்ந்தபின் செயல்தொடல்நலம்.

வினையது புரிவோரின்
செயல்முறை என்பது.
வினையின் இயல்பறிந்தோனின்
கருத்தை ஏற்றுக்கொளலே.

யானைகொண்டு இன்னொரு
யானைகட்டும் நுட்பம்போல்.
தேர்ந்தசெயலின் வகைகொண்டே
அடுத்தசெயல் தொடல்நலம்.

மாற்றுகுணத்தோரையும் தம்முடன்
பொருந்தச் சேர்த்துக்கொளல்.
நண்பர்க்கு உதவுதலினும்
விரைந்து செய்வதற்குரியதாகும்.

செயல்வலி இல்லாதோர்
தமக்கானோர்நடுங்க தானஞ்சி.
வேண்டுதல் கிடைக்கும்படி
வலியுடையோரை பணிந்தேற்பர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வித்தகனல்ல..வித்தையறியாதவன்

நான் வித்தகனல்ல
வித்தையேதுமறியாதவன்
நான் வில்லனல்ல
விவரமேதுமறியாதவன்

ஏணிப்படியாய் இருந்தும் ஏனிப்படி?
சூட்சுமம் அறிந்தானில்லை
சுடர்விடும் அறிவாளி
சூதாட்டத்தில் இவன் ஒரு ஏமாளி

பொய் பேசத் தெரியாதவன்
உள்ளொன்று புறமொன்று அறியாதவன்
நடிக்கத் தெரியாதவன்
நல்லவனில்லை

குறுக்கு வழி தெரியாதவன்
குயுக்தி அறியாதவன்
கள்ளம் கற்றானில்லை
ஆகவே வல்லவனில்லை

கோபத்தை மறைக்கத் தெரியாதவன்
கோள்கள் மீது பழி உரைக்கத் தெரியாதவன்
நயம்பட நா புரளாதவன்
நாணிக் கோணி வளையத் தெரியாதவன்



ஊர் மாறினாலும் தான் மாறத் தெரியாதவன்
பழைய பஞ்சாங்கம் என்று பெயரெடுத்தவன்
இருவேறு தராசு கையில் கொள்ளாதவன்
இருவேறு இதயம் இல்லாதவன்

எப்படியும் வாழலாம் என்பதற்கு இணங்காதவன்
இப்படித்தான் நான் எனும் இறுமாப்பு கொண்டவன்
கறிக்குதவாத கொள்கை கொண்டவன்
பின்தொடர அடிப்பொடி இல்லாதவன்

நறுக்குத் தெரித்தாற் போல் பேசுபவன்
நண்பர்களை பெருவாரியாக இழந்தவன்
நான் எனப்படுபவன் நல்லவனில்லை
நாகரிகம் சிறிதும் அறிந்தவனில்லை

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# தனிமையின் கண்ணீர்

ஆதவனின்
உதயத்தில்
மௌனத்தின்
உச்சத்தில்.

உள்ளத்தின்
ஊற்றில்
தனிமையின்
கதறல்கள்.

எட்டிப் பார்க்கும்
இமைகளில்
பனித்துளியாய்.

கடந்து போகும்
சோகங்களின்
மேகங்களாய்.



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

உஷ்ணத்தில் உருகுமுன்
ஸ்பரிசத்தின் வேட்கையை தணிக்கவா

ஆரத்தழுவி என்னரவணைப்பால்
உன் கொதிநிலையகற்றி உறைநிலைக்கு இழுத்துச் செல்லவா

மலராவுன் பூவிதழில் முத்தங்கள் பதித்து
பூப்பெய்திட வைக்கவா.

தோலுரித்த உன்மேனியில்
என்நகங்களால் சீண்டி விளையாடவா.

உன்னோடுருண்டு பிரண்டு உன் தேகத்தின் துகள்களை
என்மேனியோடு கலந்து புணையவா.



களையகற்றியவுன் பால்நிலத்தில்
பன்னீர் தெளித்து சுவைக்கவா.

வறட்சிகண்ட உந்தேகத்தில்
நீராபிஷேகம் செய்து புரட்சி பண்ணவா

அணுக்களை தூவி விதைத்துனக்கு
தாய்மை மகுடம் சூட்டி அலங்கரிக்கவா.

கோவனத்தில் மானத்தை மறைத்த
மருதநிலத்தானின் மண்ணின் மீதான காமமற்ற மோகமிது.

கவிஞர் ஷியாஸ்னா பைஸல், நாவலப்பிட்டி (இலங்கை)

# நாயும் நீயும்

தெருவிலே என் கண்கள்
மேய்ந்து கொண்டிருந்தன.

நீயும் நின்றாய்.
நீ வளர்க்காத
தெரு நாயும் நின்றது.

நாயோ தெருவின் ஓரமாக.
நாலா பேருக்கும் தொந்தரவு
குடுக்காததாக.

நீயோ நின்றாய்
வீதியின் நட்ட நடுவிலே
நாலா பேரின்
திட்டுக்கும் ஆளாக.



அந்த நாயோ
மிகவும் அழகாக.
நீயோ அலங்கோலத்தின்
மொத்த உருவமாக.

சிங்கராச வனமோ
சிறகு முளைச்சு
நிற்கக் கண்டேனே
உந்தன் தலையிலே.

விரல்களின் நுனிகளிலோ
அதி விசேட விடமுட்கள்
அவை ஒவ்வொன்றுக்குள்ளும்
ஆயிரமாயிரம் அழுக்குகள்.

உருண்டத் தலை
மத்தளம் போன்றதாக.
உடையோ உடம்போடு
ஒட்டி உறவாடுவதாக.

பைத்தியனும் தோற்பான்
பரதேசியும் தோற்பான்
பாதையில் நிற்கும்
பகுத்தறிவாளன் உந்தன்
அலங்கோலம் கண்டு.

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான், (இலங்கை)

# உப்பு காரர்

அம்மா உப்புக்காரர் வந்துவிட்டார்
அடுத்த வேலை நிரம்பி விடும்
உப்பு அலமாரியில்.
மிதிவண்டியிலே உப்பை சுமந்து
மேனியும் இளைத்து போனது
நானும் பெரியவனாய் ஆனேன்.
வாங்கியவர்கள் மறைந்தாலும்
வயதாகியும் உப்பு விற்க
வந்துகொண்டு தான் இருக்கிறாய்!
கைநிறைய அள்ளித்தரும் உனக்கு
கைமாறு செய்ய முடியாத
கடனாலியாய் நிற்கிறோம்
இறுதிவரை.



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# அவள்

இரவின் இருளில்
நிலவின் ஒளியில்
நிழல் தரும்
உன் வெளிச்சமடி

கவிதை வடிவில்
கண்ட கனவில்
உன் நினைவுகள் மட்டும்
மிஞ்சியதடி



இதமான காற்றும்
இதயத்தோடு
இசை பாடியதே
இன்னிசை உன் அழகில்

தோகை மயிலின் அழகோ
உன் கூந்தல் விரித்து ஆடி
கூவும் குயிலின் குரலாய்
நீ மொழியும் வார்த்தையடி

பச்சைக்கிளியாய் நீயும்
பத்திரமாய் பார்த்திடும்
காவலனாய் நானும்
இருந்திட ஆசையடி

கவிஞர் சுபியா பானு, இலங்கை

# காட்சிப் பிழை

நாடில்லாமல் வாழும்
நாதியற்ற இனம்!
நாட்டாண்மை செய்ய
நாலாயிரம் கூளியர்!
நிகழ்வுகள் தந்த காயம்
விடியல் தேடி பயணம்!

நீர் தடம் முறித்த
குடியிருப்பு வளாகம்!
பெரும்புனல் வாட
கருகிய கழனி..
கவளச் சோற்றுக்கு
காத்திருக்கும் குடிகள்.
கார்காலம் வேனிற்
காட்சிப் பிழையாக.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# தொடரும் நிர்பயாக்கள்

கோரத் தொற்றாய்
கொடூர அரக்கனாய்
கொன்றுக் குவித்த
நோய் காலசமயங்களில்
தன்னுயிரையும் கூடத்
துச்சமென நினைத்தவளைத்
துடித்திட வைத்ததும்
முறையோ இறைவா!
கண்ணைத் தோண்டி
கழுத்தை மிதித்து
கதறியவளின் குரலும்
கேட்காத செவிடருக்கா
கடமையாற்றினாய் மகளே?
சலசலக்க மட்டுமா
சமூகவலைத்தளங்கள்
தொடர்கின்றதே.

தீர்ப்புகள் தீர்வாகுமா
நடுஇரவில் நகையுடன்
நங்கைகள் நடந்திடும
நாளன்றே சுதந்திரமென
நவின்றனர் அன்று
நடுப்பகலிலும் கூட
நாலுவயது சிறுமிக்கும்
நிச்சயமில்லை பாதுகாப்பு
நதியாய், நிலவாய், மலராய்
கற்பனையில்
உவமையாக்கிடுவோரே
உயிருள்ள மனுசியாக
உண்மையைஉணர்வீரோ.




கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோவில்

# நீயின்றிய பொழுதுகள்

தேடித்தேடி நீ என்னைத்
தொடர்ந்ததால் நிலை தடுமாறி
வீழ்ந்து அடங்கிப் போனேன் அன்று
மீண்டெழ முடியாத தடுப்புக்களால்
உன்னை என்னுள் தொலைத்துவிட்டு
விழி மூடக்கூட நேரமில்லாமல்
விரட்டி விரட்டி தேடுகிறாய்



விடை தெரியாமல் உன்னில்
நானும் என்னைத் தொலைத்தேன்
நட்சத்திரக் கனாக்களில்
சூரியனை மறந்து போனேன்.
சுட்டெரிக்கும் வெயிலிலும்
அடைமழை வானின் கீழும்
நீ தானே வந்து குடைபிடிக்கிறாய்

உன் மூச்சுக்காற்றையே
எனதாய் சுவாசித்ததால்
திடீரென அனல் காற்றாகி
நீ கதவடைக்கும் போதெல்லாம்
புரியாத வலிகளால்
மாரடைப்பாய் உணர்கிறேன்.

என் வரிகளில் தினமும்
உன் ஊடுருவல் நாடி நரம்புகளில்
செவ்வணுக்களென உதிரத்தோடு
உயிர் மூச்சிருக்கும் வரை
ஊறிக்கொண்டு தானிருக்கும்.
உனக்கேது பரியும்.

நா நுனி வார்த்தைகளை
நகரவிடாமல் இதழ்களை
இலகுவாய் மூடியடைத்து விட
உன்னாலன்றி யாரால் முடிகிறது
உன் மூச்சுக்காற்றின் சப்தத்தில் தான்
என் சுவாசமே மீள்கிறது

நிறுத்தி விடாதே
உன் சுவாசத்தை மட்டுமல்ல
உன்னால் சுவாசிக்கும்
என் உயிர்மூச்சையும் சேர்த்து.

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# கதவுகள் இல்லாத

கதவுக்குப் பின் யார் இருந்தால் என்ன?
இல்லாவிட்டால்தான் உனக்கு என்ன?

தெரிந்து கொண்டு என்ன ஆகவேண்டும்;
உனக்கு?
திறக்காத கதவுகளைத் தட்டிக் கொண்டு
இருப்பதைக் காட்டிலும்; சிறுமை வேறொன்றும் இல்லை.



பிச்சைக்காரர்களுக்கும்,
கழைக்கூத்தாடிகளுக்கும்,
உரியது; அது.

கோமாளிகளும்,
ஏமாளிகளும்
குவியும் கூடாரம்.

உனக்கு அது எதற்கு?

திறந்த அம்பலத்தில்
யாவரும் காண,

அற்புதம் நிகழ்த்தும்
வல்லமை உனக்கு
உண்டு; என நம்பு.

கற்பனைத் துயரத்தில்
மூழ்காமல்,எழு.

நிந்தனை செய்யாமல்,
நிமிர்ந்து நில்!

சாதனைகள் புரி.
வாதனை நீங்கும்.

கதவுகள் இல்லாத
மண்டலங்கள் திறக்கும்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# எது விடுதலை?



விடுதலைக்காக
இன்னமும்
வேட்கையுடன்
போராடிக் கொண்டுதான் இருக்கிறோம்.
அன்று. அந்நியன் பிடியிலிருந்து
இன்று காசுக்காக.

மாசுபடிந்த மனதுடன்
கல்வியைக் கூறுபோடும்
கயவர்கள் பிடியிலிருந்து.

கடமையைச் செய்யாது
கையூட்டு வாங்கும்
அதிகாரிகளின்
பிடியிலிருந்து.

காசு கொடுத்து
ஓட்டு வாங்கும்
அரசியல் வாதிகளின்
பிடியிலிருந்து.

திறமையால்
முன்னுக்கு வர
திரானியில்லாமல்
காக்காப் பிடித்தே
முன்னேற நினைக்கும்
பிராணிகளின்
பிடியிலிருந்து.

பதவிக்காக
துரோகத்தை
தயங்காது செய்யும்
பிரேதங்களின்
பிடியிலிருந்து.

எங்கோ ஓர் மூலையில்
சிந்தனை நெருப்பைப் பற்ற வைக்க
செங்குருதி சீறிட.

ரௌத்திரத்துடன்
பவித்ரமான
பாரதியாக சிலர்
நியாயமெனும்
விடுதலைக்காக
வேட்கையுடன்
போராடிக்கொண்டு தான்
இருக்கிறார்கள்.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# உனக்கென மட்டும் வாழும் இதயமடி



பொன்னெழில் ஓவியமே
புதுமைக் காவியமே

செவ்விதழ் சித்திரமே
செதுக்குகிறேன் நித்தமுமே

இளமையின் வனப்பே
இதமானத் துடிப்பே

குறுநகையில் வீழ்ந்தேனே
நறுமுகை தேவதையே

இன்பத்தின் இனிமையே
இதிகாச நாயகியே

நெஞ்சமும் துடிக்கிறதே
வஞ்சியை நினைக்கையிலே

மஞ்சத்தில் உறக்கமில்லை
தஞ்சமானேன் உன்னிடமே

மான்விழிப் பார்வையில்
வசமானேன் அன்பே

தேனமுத அதரங்களும்
ஈர்த்திடுது என்னையே

வாலிபத்தின் எண்ணங்களில்
இணைந்திட்டப் பாவையே

நித்தமும் கனவினில்
நீங்காது வருகிறாயே

சிந்தையில் வந்தவளே
சிறகடித்துப் பறக்கிறேனே

நினைவுகளில் மூழ்கியே
நினைவலைகளில் நீந்துகிறேனே

உனக்கென மட்டும்
வாழும் இதயமடி

வேறொருத்தி குடியிருக்க
அனுமதி இல்லையடி

உணர்வான உயிரே
உறவாகி வந்துவிடு.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தின், விருதுநகர்

# தெரிவை தேடும் படலம்

கருப்புக்கவுனி நிறத் தோல்
எட்டுக்கட்டு வடிவு மெய்
ஆனைமுடி உயரத் தோள்கள்
நெற்தாள் நரம்புகள் உடையவன்
நாற்றங்கால் வேலைமுடித்து
நிறைகண்மாயில் நீராடல் நேரம்

கரையோர பனைமரத்தில்
பாதிமுகம் மறைத்து
எட்டி எட்டிப்பார்க்கும் நிலா
காட்டிக்கொடுக்கும் நட்சத்திரங்கள்
கண்ணும் கண்ணும் பரிமாறும் காதல்

நாணம் கூடி மேகத்திற்குள்
அவள் ஓடி ஒழிந்து கொள்கையில்
ஆடி மாதம் முடிந்ததும்
அள்ளிச்செல்ல வருவேன் என்கிறான்

மாப்பிள்ளை பழரசம் அருந்தி அருந்தி
வாலிபத்தை அணைகட்டித்
தேக்கிவைத்திருக்கும்
கடம்பவனத்துக் காளையன்



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# பசித்தோர்க்கு உணவளி

ஏழைகளை கண்டு மனம் இறங்கிடு
கொடுத்தவன் வாழ்வு நாளும் குறையாது
யாசகம் கேட்போருக்கு இல்லையெனச் சொல்லாதே
தானம் தலை நிமிர வைக்கும்
ஒரு வேளை உணவில்லாமல் இருப்பவர்
எத்தனை பேர் தேடிச் சென்று
உணவு வழங்கி மகிழச் செய்
அவர்களின் புன்சிரிப்பு உனக்கு போதும்
இவ்வுலகில் எதுவும் இல்லாமல் பிறந்தோம்
எதைக் கொண்டு போகிறோம் இருக்கும்
நாளில் நன்மைகளை செய்து வாழ்ந்திடு
தானத்தில் சிறந்தது அன்னதானம்
தினமும் ஒருவருக்குக் கொடுத்து மகிழ்ந்திடு
பிறர் மகிழ்வதைப் பார்த்து இரசித்திடு
உனது வாழ்க்கைக்கும் இறைவன் விடையளிப்பான்
நல்லதேச் செய்வோம் நல்லதே நடக்கும்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# எங்கு?

உன் உள்ளம் எங்கு
புன்னகைக்கிறதோ
இளகிக் களிக்கிறதோ

உன் உள்ளம் எங்கு
திருப்தியுறுகிறதோ
சுதந்திரம் உணர்கிறதோ

உன் உள்ளம் எங்கு
ஐயமின்றியிருக்கிறதோ
ஐக்கியமாகிக்கிடக்கிறதோ

உன் உள்ளம் எங்கு
அமைதி கொள்கிறதோ
பூரணத்தை அடைகிறதோ

அங்கேயே
நில்
தரி
நிரந்தரமாகத்
தங்கி விடு



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஈரப்பதம்

சீற்றத்தினால்
சிதறிய வார்த்தைகளை
சிந்தும் நீர் துளிகளால்
சீர் செய்ய விரும்பினேன்
சிறு சிறு துண்டுகளாக
சிதைத்த கண்ணாடியை
செம்மை செய்ய
சிறிதும் போதவில்லை
விழிநீரின் ஈரப்பதம்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

ஆடி மழைக்காற்று
நின்றதும் ஓடோடும் மகள்
வீட்டு மரத்தில் குருவிக்கூடு!



கவிஞர் லா. பெனீஷ், திசையன்விளை நெல்லை

விடாமுயற்சிக்கு பின்னே
விடாமல் துரத்தி பேசிவிட்டு
விதவிதமான சண்டையிட்டு
விட்டுச்செல்லவும் எத்தனித்தாயே
விகல்பமில்லா அன்பதையும்
வித்தியாசமாக தந்துவிட்டாயே
விதிமுறைகளுடனா பேசினாய்
விடியலிலும் உன் நினைவே
விழிமூடும் போதும் உன் நினைவே
விழி அழுவதும் அறியாமல்
விலகிச் செல்ல காரணமென்ன?
விட்டுச்செல்வதே குறியென்றால்
விரும்பியே பேசியதும் எதற்காக?
வினாபல வற்றிற்குமே விடையானாயே
விடைத்தாளின் மதிப்பின் அன்பு நீயே
விதியென்று வாழ்ந்திருந்தேன்
விதிகளுக்கு விலக்காய் நீ
விழிமகனே பொய்முகம்காட்டியே
விளக்கொளியாய் வெளிச்சம் காட்ட
விரல் நொடியில் விளக்கை அனைத்தாயே
விசும்பல் ஒளி கேட்கவில்லையா
விழிநீரும் நனைக்கவில்லையா
விதவிதமான அன்பு காட்டினாயே
விலகிச்சென்றே விருப்பம் தெரிவிக்காமல்?



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# விடியுமா?



கிழக்கு வானம் வெளுக்கிறது;
கதிரவன் முகமும் தெரிகிறது;
மாலை நேரமும் வருகிறது;
மங்கியவொளி தந்தே கதிரவனும்
மறைகின்றான் மேற்கு வானில்.
மண்ணில் நாள்தோறுமிது நடக்கிறது;
மனிதன் இவனும் நம்புகிறான்
மனமது மகிழ்ந்தே வாழ்ந்திட
விடியல் ஒருநாள் மெய்யாகவே
வந்திடும் என்றே மூடனாய்!

எந்த இயக்கம் ஆண்டாலென்ன?
எவர்தான் ஆட்சி செய்தாலென்ன?
இராமன் ஆண்டாலென்ன அல்லது
இராவணன்தான் ஆண்டாலென்ன என்று
எண்ணிடும் மடமாந்தராய் நாம்வாழும்வரை
எண்ணிலா துயரமெனும் இருட்டில்
விடியலை எதிர்பார்த்தே இறந்தடுவோம்!

மண்ணில் அரங்கேறும் அநியாயங்கள்,
மனித மனத்தின் வக்கிரங்களை
அழகாய்ப் படம்பிடித்து காட்டுகின்றன;
அறிவில் விண்ணையடக்கிய மனிதனால்
ஆசையாலவன் மனத்தையடக்க வியலாபாவியாய்
அடுத்தவர் வாழ்வின்வெளிச்சம் அழிக்கின்றான்!

உள்ளத்தில் உள்ளே இருந்திடும்
உள்ளொளி தேடி நமக்குள்ளே
பயணிக்காது வெளியுலகில் பயணித்தால்
பகலவன் பாரில் அனுதினமும்
பட்டொளி பரவச் செய்தாலும்
பாவிகள் நமக்கெப்போதும் இரவே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# பணம் பத்தும் செய்யும்

பணமென்றால் பிணமும் வாயைப் பிளக்குமென
பட்டறிவு மிக்கவர்கள் பகிர்ந்து சென்றார்கள்
பணத்தைக் கொண்டு பாதாளம் வரையில்
பயணம் செய்யலாம் என்போரும் உண்டிங்கு
பாட்டாளி முதலாக படிப்பாளி ஈறாக
பயணம் செய்வது பணத்தை ஈட்டுவதற்காக
கட்டிய மனைவியும் பெற்ற பிள்ளையும்
எட்டியே பார்த்து ஏமாறுவது பணத்திற்காக
சுற்றமும் நட்பும் சூழவே நோக்குவத
சேர்த்து வைத்திடும் சேமிப்பு பணத்தையே
வாயில்லாப் பூச்சிகள் கூட இங்கு
ஏழையின் வீட்டு வாயிலை மிதிப்பதில்லை
சமூகம் சார்ந்த செயல்கள் எல்லாம்
வியூகம் வகுப்பது பணத்தின் போக்காலே
சாதியும் மதமும் கூட இங்கு
சச்சரவு கொள்வதில்லை பணத்தின் முன்னால்
நீதியும் நேர்மையும் கூட இங்கே
நிலைபெற வேண்டில் தேவை பணபலம்
உன்னை நீயும் உயர்த்திக் கொள்ள
உனக்கு வேண்டும் என்றும் பணமே.



கவிஞர் கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை

# நீ வருவாய் என



அன்பே நீ வருவாய் என காத்திருந்த
காலங்கள் எழுதப்படாத கவிதை வரிகளாய்

உன்னால் காயம்பட்ட எந்தன் இதயம் இன்று
இழப்புகளின் கண்ணீர் அஞ்சலி சொற்களாய்

உன்னால் ஏமாற்றப்பட்ட நான் ஏக்கங்களின்
தெளிவில்லாத முகவரிகளாய்

உன் உதடுகளின் உச்சரிப்பில் தோல்வியின்
சுவடுகள் தினந்தோறும் எனக்குள் பாதயாத்திரையாய்

காதல் என்பது உன் வரை உதட்டுச்சாயமாய்
அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தியாய்

உந்தன் பிரிவால் நான் நின்று போன
நிமிடங்களாய்

தொலைந்த நினைவுகளை தேடி அலைகிறேன்
இரவு நேர கனவுகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கரிமுக கணபதி

கரிமுகம் கண்டிட கந்தனைக் கண்டேன்
அரிமுகம் தாங்கிய அம்மனைக் கண்டேன்
பரிமுகம் உடைய பரந்தாமனைக் கண்டேன்
விரிசடை மதியோடு விமலனைக் கண்டேன்

கரிமுகம் போற்றிட களிப்புடன் இருந்தேன்
கரிமுகம் போற்றிட கவிதைகள் படைத்தேன்
கரிமுகம் போற்றிட கவலைகள் மறந்தேன்
கரிமுகம் போற்றிட கனகமாய் ஒளிர்ந்தேன்

நரிகுணம் உடையோர் நட்பை அகற்றி
எரிதழலென சுடுவோர் உறவை விலக்கி
சிரிமுகம் கொண்ட சிறந்தோரை நட்பாக்கி
கரிமுக கணபதியே கணமும் துணையாகு



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

தேடலின் தூரம்
தொலைவில் தான்
பக்கம் பக்கம் கொஞ்சம்
கைக்குள்



தள்ளிப் போகும் போதெல்ல
முனுக்கென்று பூக்குது
கண்மலரின் இதழ்கள்

அடங்கிடு என அதட்டி
சுருட்டுவதற்குள்
முத்துக்களின் சிதறலில்

முரண்பட்டு முகந்திருப்பும்
புதியதோர் வார்ப்புதான்
சினத்தை அறுவடை செய்யாத மனம்
தவறவிட்டு விட்டு தாளிதம்
செய்வதேனோ

அகத்தை கூறாக்கும்
பாராமுகம்
அதிகம் அசைபோடுது
ஏனிந்த நிலையென
எண்ணிய வியப்பில்
தள்ளிப்போக நினைக்கும்
நிமிடங்கள் சற்றே கடினம்தான்

புரிதல் எங்ஙனம் தொடங்குது
மரக்கட்டை மனதிற்கு
பூக்களின் நறுமணம்
மணக்கவே செய்யாது

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# சிறகு முளைத்தால்

சிறகு முளைத்தால் பறப்பவைகளுக்கு சுதந்திரமோ?
பறந்து விடத்தான் உனக்குள்ளும் ஆசை முளைக்காதோ?
வானம் தொடும் பறைவையைப்போல
திறமைக்கொண்டு பாரினில் அழகென திரள வேண்டும்.
மனம் உடையும் படையென திறளும் கூட்டங்கள்.



எம்மைச்சூழத்தான் கிடக்கு.
அதை நீ தான் அடக்கு
வாய்ப்புகள் வரும் காத்திரு.
உனக்கானது உன்னைச்சேறும் பொறுத்திடு.
மறுத்து பேசுவோரை விளக்கி நிறுத்திடு.
வாய் பூட்டு போட்டால்
செவி சேறும் கேடு வார்த்தைகளை அழித்திடலாம்.
உன்னில் ஏற்றிடு.

தடம் பதிக்க தடயம் பதிக்க தயக்கம் உடைக்க வேண்டும்.
படைத்திறள விடைத்தெரியா புதிரென தட்டி விட
காத்திருக்கும் கூட்டம்.
காயப்படுத்தி சிறகுடைக்க காத்திருக்கும்.

எதற்கும் எல்லை இல்லை மனிதா!
முந்நிறுத்திடு.

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# தன்முனைக் கவிதை

கண்களின் குற்றம் சிந்தைக்கு
திரும்ப வந்தால் துன்பம்
அந்த சிந்தையின் குற்றம்
செயலுக்கு வந்தால் பெருந்துன்பம்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# நீ வேண்டும்

உன்னைக் காணும் அந்த சில நொடிகளுக்காக
பல மணி நேரம் காத்திருக்கும் அந்த நேரத்திற்கு தெரியும்
நான் உன் மீது கொண்ட காதலின் உயரம்!

இன்னும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
உன்னை காதலிக்க தேடி வருவேன்!

இதயம் துடிப்பது சாதாரண விடயமாக இருக்கலாம்
ஆனால் என் இதயம் துடிப்பது உனக்காக மட்டுமே!

மரணமே வந்தாலும் உன்னை மறக்காத இதயம் வேண்டும்
மீண்டும் ஒரு பிறவி என்று இருந்தால்
அதிலும் நீ தான்
என் காதலாக வேண்டும்!



கவிஞர் ஜோதிமணி, தாராபுரம்

# எனக்குள் நான்

களைத்து களைத்து
கண்ணை மூடினேன்
கண்டு கொண்டேன்
கண்ணெதிரே நின்ற என்னை

நீ மட்டும் எப்படி
இவ்வளவு மிடுக்காய்
துரோகம் கண்டு
துவள வில்லையா நீ


உழைத்த உழைப்பெல்லாம்
உதறி தள்ளியது போது
வீழலுக்கு இறைத்த நீராய்
வீணாகியது போல்
உனக்கு பதறவில்லையா?

கண்களே கலங்கினாலும்
கண்ணீர் வராதபடி - எப்படி
இருக்கிறாய் இப்படி ?

என் எதிரே நிற்கும்
என்னிடத்தில் தான் கேட்கிறேன்
இதோ, பதில் அளிக்க போகிறாய்.

முயற்சி முறிந்து போகும்போது
கவலை கொள்வதில்லை

ஒரு கிளை முறிந்து போனால்
அந்த இடத்தில்
பல கிளை முளைக்கும்
பலம் உள்ளவரை உழைக்கும் - மரம்
அதே இடத்தில்தான் இருக்கும்



இலக்கை அடையும் வரை
முயற்சி இருக்கும்
இலக்கணமே எழுதும் படி
என் பயிற்சி இருக்கும்

எழுந்து வா - என்று
சோர்ந்து கிடந்த என்னை
எதிரே நின்ற நான்
கை தூக்கி விட்ட தருணத்தில்
விழித்து பார்க்கிறேன்!
ஆம்
என்னையே கண்டு
உணர்ந்து விட்ட பிறகு
நான் கலங்கிவிட
இனி எதுவும் இல்லை
நான் உயர்ந்துவிட
தடுப்பவரும் இல்லை:
வெற்றி எமதே!

*கவிஞர் சி முத்துராசன், அரியலூர்*

# என்னுள் கவி

## நேரிசை பஃறொடை வெண்பா
## (ஒரு விகற்பம்)

என்மனத்தின் எண்ணங்களை ஏற்றமுடன் ஏடாக்கி
நன்மனத்தின் பக்கங்கள் நல்சுவையாம் - நன்சுவையில்
பன்மடங்கு கற்பனையில் பாக்கள் புனைந்திட
தன்னிறைவும் பெற்றிட்டேன் தைரியமாய் - புன்னகையும்
என்னுள்ளே நாளும் இயல்பாய் மரமாக
நன்கவியை சாராக்கி நான்மகிழ்ந்தேன் - நன்மையும்
தன்மையும் தங்கு தடையின்றி மெய்ச்சிலிர்க்க
தென்தமிழ் சொற்களும் தேனாகும் - அன்னையின்
அன்பில் தினமும் அமுதகவி நான்படைக்க
இன்புமுடன் நல்குதே இல்வாழ்வு - என்வாழ்வில்
என்கவியும் எங்கும் இனிதாக ஓங்கிடனும்
தன்னுள் கவியாய் தமிழ்



கவிஞர் ஈ. தீவணிதன், பல்லடம்

# காதல் பித்தன்

பித்து பிடித்து பிறை நிலவைக் கண்டு நீதான் அதுவென்று
கத்தி அழைத்த அந்த காதல் கவியுணர்வை
வித்திட்டு என் நெஞ்சில் விளைவித்ததுன் முகம் தான்
மொட்டுகள் மலருமந்த முணுமுணுப்பு சத்தம் கேட்டு
உன் பட்டுத்துயிலது பாழ்படக்கூடாதென்று
மொட்டுக்களை கட்டிப்போட முற்படும் என் மனம் தான்
இதயத்தில் சிறை வைத்தாய்
என் மனதை இன்ப வதை வதைத்தாய்
எனதுயிரை உனதுடலில் புதைத்தாய்
எனக்காக இப்புவியிலோர் பிறவி எடுத்தாய்
மூச்சுக்காற்றில் முழுமையாய் நீ கரைந்து
நாசிக்குள் குழைந்து
என் நரம்பெல்லாம் நடனமாடி
வியர்வையாய் வெளிவந்தே உடல் கலந்தாய்
வீசும் பார்வையால் விழுங்கினாய் என்னை
உயிரை உடல் மாற்றும் வித்தை கற்றவளே!
உன்னோடு வாழ்கிற ஓர் நொடியும் யுகம்தானே!



கவிஞர் அ. தனசேகரன், அருளவாடி, விழுப்புரம் மாவட்டம்

# மறந்திட மறந்தவை

மறந்ததை விட
மறந்து விட்டதாக
நினைத்துக்கொள்வதே
அதிகம்



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# விசித்திரம்

பெண்ணியம் பேசி
மகிழ்ந்திடும் பெண்ணே.
பேதையின் நிலையை
தூற்றிடும் விசித்திரம்.
மங்கலம் என்று உரைத்திட்ட நாவில்
அமங்கலம் என்றே தூற்றும் விசித்திரம்.
வம்பிழுத்து பேசும்
வசை பாடி கிழிக்கும்
பெண்ணுக்கு பெண்ணே
பேசும் விசித்திரம்.
இந்நிலை மாறவே,
விந்தை மிகும் உலகில்
சமூகத்தை சீர்திருத்தவே
நல்விதை ஒன்றை விதைத்து
நற்பிள்ளைகளை உருவாக்கி
நம் இல்லத்தில் தொடங்கியே சீரமைப்போம்.
இந்த,விசித்திரமான மனிதர்களை மாற்றிடவே.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# நகர வாழ்க்கை

பச்சை பசேல் என ஊர் நிறைய மரங்கள்
சாலையோர பூங்காக்கள்
விளையாட்டுத் திடல்
ஆற்றங்கறையோர தோப்புகள் என
வாழ்வியலோடு இரண்டரக்கலந்த *மரம்*
ஒரு உறவாகவே இருந்ததொரு காலம்.

ஊர் நடுவே *ஆலமரம் அரசமரம்*
ஊருக்கே நிழல் குடையாய் உறவாய் இருந்திட்ட
மரங்களின் பங்குமே ஒரு மாண்புதான்.

தேவைக்கேற்ற மழை வற்றாத நீர்வளம் அமுதமாய்
தாலாட்டிய *தூயகாற்று* வீட்டுக்கொரு "இன்னொரு தாயாய்"
பால் தரும் பசுமாடு நாட்டுக்கோழியும் முட்டைகளுமாய்
ஆரோக்கியம் காத்திட்ட வாழ்வியல் முறை.



வீட்டுக்கொரு தென்னை வாழை என
குடும்பத்து வாரிசாக மரம்.
ஆவி பறக்கும் வாழை இலைச்சோறு
வற்றாத நிதி நிலைக்கு *ஆடுகள்*
அறிமுகமில்லாத மனிதர்கள் என்றால்
ஆயிரம் கேள்விகள் கேட்கும்
*ஊருக்கே காவலாய் தாத்தா பாட்டி*.

கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்திட்ட
குதூகல வாழ்க்கை நினைத்தாலும்
கிடைக்காத அற்புத வாழ்வு
நாகரீக வளர்ச்சியென *நரகமாய்* போய்விட்ட
*நகர வாழ்க்கை*

ஏங்கும் மனம் இனி கிடைக்குமா?

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# எல்லைச்சாமி

எத்தனை முறை
என் பிஞ்சுக் கால்களை
சுமந்து
ஊஞ்சல் ஆடியிருக்கும்

பூர்வீக வீட்டின்
முரட்டுக்காவலனாய்
மீசை முறுக்கும்
எல்லைச்சாமி அது

அம்மாவின்
அடி கண்டு
பிடித்திழுக்கும்
மறைவிடம் அது

காம்பஸ் கொண்ட
ரவிவர்மாவாய்
நான் மாறும் போதெல்லாம்
என் ஓவியக் கூடம் அது

புதியவர்களிடம்
என்னை ஒருமுறை கூட
முழுதாய் அறிமுகப்படுத்தாத
பாரம்பரிய கண்ணாடி அது

அண்ணன் ஒருமுறை
காதலியின் பெயர் எழுதி
அப்பாவிடம்
மாட்டிக்கொண்டான்
அன்று முதல்
அது கல்வெட்டாகியது



தொழில்நுட்ப
உச்சத்தின் விரல் நுனி
மாயாஜாலம் இல்லை அது

வருடங்கள் வழிந்தாலும்
என்றாவது போய் பாருங்கள்
வாழ்ந்த வீட்டின்
பழைய கதவுகளை

உங்கள் சிறுவயது
தழும்புகளுடன் காத்திருக்கும்
வாசலில் மாட்டியபடி
அல்லது
எங்கோ ஒரு மூலையில்
சாத்தியபடி

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

நாச்சியார் திருமொழி மூன்றாம் திருமொழி
பாடலாறு முதலாக பத்தீறா ஐந்துரைத்தல்
காண்போமே! தாமரைப்பூ தடாகத்தே வெற்றுடலில்
மீன்கடித்துயர் போதாதாய் சேற்றமிழ்ந்த காலிரண்டும்
தண்டுகளால் சிக்கும்நிலை விடுபடவே இயலாத
துன்பமைதல் போக்கிடவே வேண்டுகின்றார்! நச்சுமிகுதேள்
மேலெறிந்தார் போன்றதுயர் மண்டியதே! திருமாலே!
தீம்பெல்லாம் நேர்தவிர்த்து வஸ்திரங்கள் வழங்கெனவே
ஆறதனில் வேண்டுவரே! ஏழதனில் மெல்லியலார்
தங்களையே துன்புறுத்தல் நீதிதவறல் ஆகிடுமே!
அநீதியின்பாற் படாதிருநீ அறிவுறுத்தல் கண்படுமே!
வெற்றுடலில் குளிர்நீரில் வருந்துவதும் அக்கிரமங்கள்
தொடர்ந்தேநீ இழைத்தனையே! தப்பிக்க இயலாத
தூரத்தே ஊரதுவும் வீடதுவும் அமைந்துளவே!
உம்பாலே எம்மன்பு மிக்கிடவே காண்கின்றோம்!
உன்னோடும் கூடிநிற்றல் தாயர்கள் அனுமதியார்!
உடுப்பளித்து மானங்கார் எனவேண்டல் காண்கின்றோம்!
குருந்திழிந்து உடுப்பளித்து மகிழ்விக்க வேண்டுவரே!
எட்டாவதில் உனக்குநாண மிக்கிடவே உறவினர்கள்
வந்துள்ளார்! அவர்முன்னே தீம்பாற்றல் அவமானம்
மிக்கிடுமே! குருந்தின்மேல் கூறையொடு ஒளித்தமர்ந்த
குறும்பினனே! பகலெல்லாம் தீம்பாற்றி இரவயரும்
கள்ளத்தன மிக்கோனே! முறைமாமன் மகளோடும்
மாமியென தாய்மார்கள் சூழலிலே தகவில்லா
தீம்பகற்றி உடுத்துவன உடனளித்து துயரகற்ற
வேண்டுவரே! ஒன்பதிலே கொண்டாடுவார் நிந்திப்பார்
கார்யங்கள் ஒக்கதுவாய் ஆற்றுகின்ற பண்பாள!
எம்நெஞ்சில் துக்கத்தை நிரப்புவதேன்? உடையளித்தே
நாணந்தவிர்! பத்தினிலே பலனுரைப்பார்! மாலோடும்
தானொன்றி வைகுந்தம் நண்ணுவராய்ச் சாற்றுவரே!



கவிஞர் கணக்காயர் (இ. சே. இராமன்)

# ஒரு தலைக்காதல்

காதலே வேண்டாம் என எண்ணிய என்னையும்
காதல் எனும் மாயவலையில் விழ வைத்தவனே

அன்று உன்னால் நான் தினந்தோறும்
எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தேனடா
அதுவே என்னை இன்று தினந்தோறும் வாட்டி வதைக்கிறதடா

முதற்காதல் ஆனாலும் சொல்லப்படாத காதல்
என்னுள் மட்டும் ஆசையும் காதலும் உண்டாகி என்ன பயன்

உனக்கான காதல் இன்னொருத்தியை சார்ந்தது எனும்போது
என் காதலை உன்னிடம் ஒப்பித்தால் மட்டும்
என்ன ஆகிவிடப் போகிறது
கல்லறையில் எழுதிய காதலாய்
என்காதலும் ஆனதே



காலம் கடந்து மீட்டிப்பார்க்கையில்
அதில் அவனது விம்பமும் கல்லறைக் காதலாகிய
என் ஒருதலைக்காதலும் தெரிகின்றது

கவிஞர் சியானா றிஸ்மி, புத்தளம் (இலங்கை)

# மாற்றிடு

உன்னுயே உணர்ந்தால்
ஆளலாம் நாட்டை.

எதிரியின் நாப்பறைக்கு
உன்செயலே சாட்டை.

உலகத்தை அறிந்திட
நீங்கிடு வீட்டை.

உன்னையே உணர்ந்திட
அடைந்திடு காட்டை.

ஆசையின் வீட்டிற்கு
போட்டிடு பூட்டை.

அரசியல் வாதிகள்
பதுக்குது நோட்டை.

மனதிலே உனக்கென
கட்டிடு கோட்டை.

ஏழைகள் கைகளில்
தங்காதது ஓட்டை.

கண்முன் அவர்கள்
படுகின்ற பாட்டை.

பார்த்து மாற்றிடு
இந்த நாட்டை.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# ஆரத்தி பாடல் (அஸ்வின் வர்ஷினி)

விநாயகர்சதுர்த்தி தினத்தன்று முகூர்த்தகாலு நட்டியாச்சு
கொங்கணகிரி கோயிலிலே மஞ்சத்தாலி கட்டியாச்சு
மத்தளத்தில் மங்களமாய் கெட்டிமேளம் கொட்டியாச்சு
மணமக்களை அனைவருமே மனங்குளிர வாழ்த்தியாச்சு

ஆடிமாசம் பிறக்குமுன்னே பொண்ணுபாக்க வந்தமச்சா
ஆவணியில் மணமுடித்தாய் எங்கமனசு இன்பமச்சா
ஐப்பசியில் அடைமழையா வந்துவந்து தூறுமச்சா
கார்த்திகை தீபம்போல உங்கவாழ்க்கை ஒளிருமச்சா

அமாவாசை வந்தாலே நிலா வெட்கப்பட்டு மறையுமச்சா
அதைப்போல உங்கமுகம் இப்பக்கூட இருக்குமச்சா
பெண்ணையும் மண்ணையெல்லாம் உங்களுக்கே தந்தோமச்சா
விண்ணைப்போல உங்கவாழ்க்கை எப்போதும் உயர்வுமச்சா

கொங்கணகிரி கோயிலிலே மூன்றுமுடிச்சு போட்டமச்சா
கொங்குநாட்டு ஆரத்தி எங்களோட பாட்டுமச்சா
மெட்டுகேத்த வரியபோட்டு பாடுவதை கேளுமச்சா
மெட்டிபோட்ட உங்களுக்கு நெற்றியில பொட்டுமச்சா



மலைக்கோயில் வாசலிலே ஒளிருதடி விளக்கு
மணப்பெண்ணை கண்டவுடன் உங்கமுகத்தில் சிரிப்பு
நாளையதினம் வரப்போகுது வளர்பிறையின் ஷஷ்டி
முருகனை மனதார வழிபட்டால் விலகிவிடும் திருஷ்டி

பட்டுஜரிகை சேலைவாங்கி எங்களுக்கு கொடுங்கமச்சா
கட்டுகட்டா நோட்டை எடுத்து எங்களுக்கு விடுங்கமச்சா
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
வாழையடி வாழையாக உங்கவாழ்க்கை செழிக்குமச்சா

கவிஞர் வெற்றிவேல், திருப்பூர்

பாலைக் கடைந்தேன் தயிரானது
தமிழைக் கடைந்தேன்
உயிரானது




கவிஞர் தூரவும் ரேகை, இலங்கை

## (மேட்டூர் அணை 21-08-1934)

சேலம் மாவட்டம் ,மேட்டூரில், கர்னல்
எல்லீஸ் அவர்களின் வடிவமைப்பில் உருவான
அணைக்கட்டே மேட்டூர் நீர்த்தேக்கம்! அந்நாளில்
ஆசியாவிலேயே உயரமான, அணையிதுவே! உயரம்
இருநூற்று பதினான்கு அடியாகும்! அகலம்
நூற்று எழுபத்தோரு அடியாகும்! சேமிப்புயரம்
நூற்று இருபது அடியாகும்! ஆயிரத்துத்
தொள்ளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டதனில் தொடங்கி
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து நான்காம்
ஆண்டுவரை, ஒன்பதாண்டுகளில் உருவாக்கிய அணையாகும்!
பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இப்பணியில்!
அணைகட்டத் தேவையான சிமெண்ட்டினை இரயிலில்
கொண்டுவர இருப்புப்பாதை! ஊழியர்கள் தங்கிட
உருவான குடியிருப்பு, தூய்மையான குடிநீர்,
பாதாள சாக்கடை வசதிகளுடன் மேட்டூரெனும்
குக்கிராமம் குறுநகரமாய் மாறியது இவ்வணையால்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து நான்காமாண்டு
ஆகத்துத் திங்கள் இருபத்து ஒன்றாம் நாளன்று
அணையின் கட்டுமானம் நிறைவுற்ற நாளாகும்!
கர்நாடகாவின் கபினியணை மற்றும் கிருஷ்ணராஜ சாகரணை
நீர்தரும் அணைகளாக விளங்குகிறது இவ்வணைக்கு!
இரண்டு நீர்மின் நிலையங்கள் இவ்வணையில் உண்டு!
சரபங்கா நீரேற்று திட்டத்தின் மூலம்
நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகளில் இவ்வணையின்
உபரிநீரை நிரப்புவதால் முப்பத்தெட்டு கிராமங்களின்
நீர்த்தேவை பூர்த்தியாகும்! நாலாயிரத்து இருநூற்று
நாற்பது ஏக்கர் நிலங்களில் பயிர்விளைய
பெரும் நீராதாரமாக நின்றிருக்கும் இவ்வணையை
போற்றிடுவோம்! காத்திடுவோம்! தொண்ணூறு ஆண்டுகளாய்
நீர்தேக்கி பயனளிக்கும் இவ்வணையின் வரலாற்றை
நினைவு கூர்தலொடு அடுத்த தலைமுறைகள்
அறிந்திட உரைப்பது அவசியம் இந்நாளில்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி, புதுச்சேரி

பிறப்பிலும் இறப்பிலும்
முதலிடம் பிடித்து விடுகிறது
நெற்றி முத்தம்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# சந்ததி

உலகிலே உதிக்கும் மொட்டுக்களை காப்போம்.
உயிர் கொடுத்து உலகுக்கு வந்தவனே(ளே)
உலகமே இன்று அனைத்திலும் சுருங்கிக்கிடக்கிறதே
விரந்த உலகிலே பரந்த செல்வம்
மழலை உருவிலே உருவெடுக்க வேண்டுமே
விரிந்த உலகிலே பரந்த செல்வமாக
பணத்தை அல்லவா உலகம் சேகரிப்பது
நாம் இருவர் நமக்கு இருவர்என்றது
நாம் இருவர் நமக்கு ஒருவர்என்றது
ஓடும் உலகிலே நேரம் போதாது
குழந்தைகள் என்றால் வளர்த்திட இயலாது
குறும்புகள் செய்தால் தடைபோட்டிட இயலாது
காரணங்கள் பலசொல்லி பிஞ்சு மழலைகளை
உலகிற்கு கொண்டு வர அஞ்சுவதேனோ
இறைவன் அளித்த அருட் கொடையே
தயங்காது பெற்றிடு வாழ்வு சிறக்குமே
உள்ளம் அமைதி கிடைக்குமே குழந்தைகளிருந்தாலே
நாளை எமக்கும் சந்ததி பெருகுமே
அச்சம் தவிர்த்திடு அனைத்தும் சிறிதுகாலமே
சிறப்புக்கள் பல பெருவாய் செல்வத்தினாலே
பல கோடி கொடுத்தாலும் தாய்மைவராது
பல புண்ணியங்கள் செய்தாலே வரமாய்வந்திடும்
தயங்காதே கலங்காதே குழந்தைகளைப் பெற்றிடுவோம்
அழகுற வளர்த்திடுவோம். சிறந்த சந்ததிகளாகவே



கவிஞர் எச்.டீ.எச் பஹீதா, கொழும்பு

# மூத்தோர் சொல்

காப்பியங்கள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள்
சொல்லோவியங்கள், சிற்பக் கலைகள், உடற்பயிற்சிகள்,
போர் பயிற்சிகள், வர்மக்கலை, நோய் தீர்க்கும் மருந்தென
எண்ணிலடங்கா பொக்கிஷத்தை தந்தனர் மூத்தோரே!

விட்டுச்சென்ற இக்கலைகளையை இன்றளவும் புகழ்கூறும்.
என்ன வளமில்லை திருநாட்டில்?
நம் நாட்டில் விட்டுச்சென்ற முன்னோர்களின் பதிப்புகளை
அயல் நாட்டில் பின்பற்றி வருகிறாரே இன்றளவும்!

பழுத்த ஓலையை பார்த்து குருத்தோலை சிரித்ததாம்.
பாவம்! அதற்குத் தெரியாது நாமும் ஒருநாள் கீழே விழுவோமென்று.
’என்ன பெருசு’ என்று ஏளனம் செய்யும் இத்தலைமுறையை
பெற்றோரே பிள்ளைக்கு புத்திதனை புகட்ட வேண்டும்.

வாழும் வரைமுறையை வகுத்தோரும் மூத்தோரே!
வீழும் கருத்தை நீக்கி, முன்னேறும் நற்கருத்தை
பின்பற்றி வாழ்த்திட்டால் எத்தீங்கும் நேராதே
நன் வாழ்ந்த அனுபவத்தில் சொன்னதுவே.

வீட்டில் வயதானவர்களை
கண்ணும் கருத்துமாக பேணி காப்போம்.




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

நடிக்கின்றன நிழல்கள்
பிரிவின் சுவரில்,
எழுத்தின் ஒளி கொண்டு
சமம் நோக்குவோம்
***

படித்தவன் நான் என்றவாறு
பனிநீர் விரலில்
கையொப்பம் இட்டு
நடந்தது நத்தை
***

நீல மேகங்கள் நகைக்க
மழை விழுகிறது
மண் வாடை மேல செல்ல
மீண்டும் நகைக்கிறது
மீண்டும் மழை !
***

பனிமழை நனையப்
பூக்கும் புது நாள்
இன்றைய பரிசு
***

மரங்களைத் தின்றால்
மழை வானம் அழுகுமோ?



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# நீ உன்னை அறிந்தால்

## நாடகம்

### காட்சி-4



இடம்: ரோடு. (மல்லிகா கையில் பையோடு சென்று கொண்டிருக்க, எதிரில் தேவிகா அழுது கொண்டே வர, சுந்தரி மாமி அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு வருகிறாள்.)

**மல்லிகா:** பதட்டத்துடன் என்ன தேவிகா ஏன் அழுது கொண்டு வருகிறாய்.

**சுந்தரி:** அவள் கணவன் லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாக பிடிப்பட்டு அவனை போலீஸ் ஸ்டேனுக்கு கொண்டு போயிருக்கிறார்கள். நாங்கள் அவனை ஜாமீன் எடுக்கப் போகிறோம்.

**மல்லிகா:** அய்யய்யோ பாவமே... எப்படி மாட்டினார்?

**சுந்தரி:** எவனோ பாவி? கம்ப்ளெய்ன்ட் கொடுத்து கையும் களவுமாக பிடித்துக் கொடுத்து விட்டான். ஆமாம், நீ எங்கே கையில் பையை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டாய்.

**மல்லிகா:** நான் என் அம்மா வீட்டிற்கு கிளம்பினேன். நல்ல வேளை கண் திறந்தார் ஆண்டவன். ஆமாம் மோகனை விட்டு விடுவார்களா?

**சுந்தரி:** பாவம், அவனுடைய சொத்துக்களையெல்லாம் பறித்துக் கொண்டு அவனை ஏழு ஆண்டு ஜெயிலில் போட்டு விடுவார்கள்.

**மல்லிகா:** அடப்பாவமே, தேவிகாவிற்கு இப்படி ஒரு நிலை வரணுமா?

**சுந்தரி:** இதற்குத் தான் சொன்னேன் ஒழுங்காக வீட்டிற்குப் போய் உன் கணவரோடு மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தப் பாரு.


**மல்லிகா:** ரொம்ப நன்றி மாமி

திரு. இரஜகை நிலவன், மும்பை

## நூல் அனுபவம்

நூலின் பெயர் : சடவு ;
நூலாசிரியர் : மா.காளிதாஸ் ;
நூல் வெளியீடு : மௌவல் பதிப்பகம்
நூலின் விலை : 130 ; நூலை வாங்க : 9787709687.

ஒரு நூல் கண்டை ஒரு பட்டத்தில் கட்டி பறக்கவிட்டால் அது வானத்தை தொடும் அதே நூல் கண்டைக் கொண்டு பூவைத்தொடுத்து தோரணமாக்கி மாலையிடலாம். அதுபோல கவிஞர் மா. காளிதாஸ் ஐயா அவர்கள் இதுவரை 10 நூல்கள் வெளியிட்டுள்ளார் .



அண்மையில் புன்னகை இலக்கிய விருது பெற்ற "சடவு" கவிதை புத்தகத்தில் பல கவிதைகளை நடவு செய்துள்ளார். ஒவ்வொரு கவிதைகளையும் வாசிக்க வாசிக்க, விளைநிலத்தில் தினமும் திணைக்கொத்தும் பறவைகளாய் நானிங்கே பல சொற்களை சேகரித்து கொண்டிருக்கிறேன். இது ஒரு கவிதை நிலம் .

"ஒரே நிறம்" கவிதையில்

நமக்கு தோதான இன்னொரு நிறத்தைத்
தெரிவு செய்யத் தொடங்கும் போது
நிறக்குருடைப் போல நம்மை நோக்கி வருகிறது
இன்றைய இரவு.

நிறங்களை தேடித்தேடி செல்ல கடைசியில் யாவும் ஒரே நிறம் தான்.

"தாழப் பறக்கும் அன்பு " கவிதையில்

நீ அடிக்கடி சொல்லும் அந்த வார்த்தை இப்போது நினைவில் இல்லை.
ஒரு உலர்ந்த முத்தத்தால் அதை திரும்ப எடுத்துக்கொண்டாய்.

திரு. திரு சு. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

"தாழப் பறக்கும் அன்பு " கவிதையில்

நீ அடிக்கடி சொல்லும் அந்த வார்த்தை இப்போது நினைவில் இல்லை.
ஒரு உலர்ந்த முத்தத்தால் அதை திரும்ப எடுத்துக்கொண்டாய்.
சாலையில் பெய்த மழையை வழிந்தோட விடாதபடித்
தடுக்கிறது நம் அன்பின் சகதி .
இப்போது நினைவிற்கு வருகிறது
குத்தகைப் படகில் அள்ளிச் சொல்கையில்
துள்ளிக் குதித்துத் தப்பிய மீன்தான்
நீ அடிக்கடி பயன்படுத்தும் சொல்
மீளத் திரும்பும் தாழப் பறக்கும் பறவையின்
ஈர அலகில் சொட்டுவது நம் அன்பு தான் என்கிறாய்.
தன்னியல்பாகக் காளானைப் போல விரிகிறது
செயற்கைப் புன்னகை.
நம் புன்னகையும் காளானை போல மெல்ல விரிகிறது ..

"கதவென்பது அழிக்கப்படாத புள்ளி " கவிதையில்

அமைதி அல்லது குலைத்தலின் பொருட்டே
ஒரு கதவு திறக்கப்படுகிறது
இறுதித் தீர்ப்பு போல செவ்வக வடிவ பூட்டு சாவிகள்
மரம் இரும்பு தகரத்திடமிருந்து விடுபட முடியவில்லை .
போர்வை அல்லது நீளத்துணி கதவாகத் தொங்கும்
வீட்டில் ரகசியம் வாசல் தலைவைத்துப் படுத்திருக்கிறது.
இரு கதவுகள் கொண்ட வாசல்
ஒளிந்து விளையாடுகின்றன
பொய்யும் மெய்யும்.

உண்மைதான் இங்கே கதவுகள் என்பது யாது என்ற ரகசியங்கள் கசியாத வரை அகத்தின் கதவுகள் அழகுதான்.

திரு. திரு சு. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

"கட்டமைக்கப்பட்ட கபட நாடகம் " கவிதையில்

பெண் உணர்கிறாள் உணர்த்துகிறாள் உணர்த்தப்படுகிறாள்
தகவமைக்கப்பட்டப் பூவென மகரந்தம், மணம்,
நிறம், வடிவம் செயற்கைப் புன்னகைகள் அறவே வெறுக்கிறாள்.
நாரும் விரல்களும் மட்டும் தொடுப்பதை அலசல்களுக்கு
அப்பாற்பட்டு ஆணியடித்த சொல்லாய்த்
தலையிலேயே தங்கிவிடுகிறது வாசனை.
மண்டியிடுதல் வாழ்த்தாக விரிதல்
ஓடும் நீரில் ஒதுங்குதல் கட்டமைக்கப்பட்ட கபட நாடகத்தின்
காட்சிப் பிழைகளன்றி வேறென்ன ..!

குன்றிமணியின் கரிய மூக்கு போல, பாசாங்கு போலி நடிப்புகளுக்கு ஒரு கரும்புள்ளி வைத்திருக்கிறார் கவிஞர். எனக்கு மிகவும் பிடித்த கவிதையிது

" நானுன் தீக்கங்கு "
கொண்டு போய் உன் காடெரி
பூஜையில் புகையச் செய்
பஞ்சு போல் மிதித்துன்
வேண்டுதல் நிறைவேற்று
புதியனவற்றைப் பொரித்துண்
பழையனவற்றைச் சுட்டுத்திண்
உச்சியில் நிறுத்தி
உள்ளங்கால் கொதிக்கச் செய்
அந்திமப் பொழுதில் அகல் விளக்கேற்று
வரிசையாய் மெழுகணைத்து வருடம் திரும்பு
மத்தாப்பாய் சிதறச் செய்
போகி கழி பொங்கல் வை
கொஞ்சம் சேதாரம் சேர்த்து
ஊதிஊதிப் புடம்போட்டு
உன்னையே நீ அணி
ஆசை கோபம் மோகத்தில்
அள்ளிப் பூசு உடலெங்கும்
துளியெடுத்துப் பத்திரப்படுத்து

திரு. திரு சி. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# நூல் அனுபவம்

கொள்ளிக்காகும்
நானுன் தீக்கங்கு!

ஒரேயொரு கவிதையில் எத்தனை எத்தனை தீக்கங்குகள் ..!


"நதியின் மேல் விழுந்த குருதி " கவிதையில்

குறிவைத்து இரையைக் கொத்திச்
செல்லும் பறவையைப் படம்
பிடித்தவன்
தவறவிடுகிறான் நதியின் மேல்
விழுந்த சொட்டுக் குருதியை.

மீன் அழகு அதை கொத்தும் பறவையும் அழகுதான்
வடியும் குருதியை எதில் சேர்ப்பது
புகைப்படத்திலிருந்தும் தவறிவிட்டது
அந்த சொட்டுக் குருதி

கவிதையில் சொல் என்பது வீரியமுள்ள விதைகள் போன்றது. அது எச்சூழலிலும் புயல் வெயில் மழை வெள்ளம் எதிலும் ஒடிந்துவிடாதபடி கிளைத்து பூத்து நிற்கும் ..


இன்னும் பல படைப்புகள் வெளியிட வாழ்த்துகள் ஐயா.




திரு. திரு சி. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

**கவிஞர் தேவயானி**
**முதல் பதிப்பு மார்ச் 2024**
**பக்கம் 20 ; விலை 20**
**வெளியீடு: வானவில் மின்னிதழ் மடத்துக்குளம்**




காவியங்கள் பல இயற்றி கலைக்கு மகுடம் சூட்டியது: எழுத்துகள் வழியே எல்லோரின் மனதுக்குள்ளும் ஏன் என்ற வினா தொடுத்தது: வசனங்கள் இறைவனையும் மன்னனையும் புகழ்பாடிக் கொண்டிருந்த புராண காலத்தில் வீரத்தையும் விவேகத்தையும் கருணையையும் காதலையும் பகுத்தறிவையும் பண்பாட்டையும் மொழி உணர்வையும் மொன்னையாகிப் போன இன உணர்வைத் தட்டி எழுப்பியும் தன் உணர்வு கொள்ளத் தூண்டியது;

அரசக்கட்டில் ஆடாமல் நிலைத்திட குறுக்கு வழிகளும் கொள்கை துறந்த சல்லாபப் பயணங்களும் கொண்டு நிலைபெற வைத்திட கிஞ்சித்தும் எண்ணமற்று ஆட்சியைத் துறந்திட சம்மதித்தது; கை இழுவை வண்டியினால் காலமெல்லாம் உடல் வலிக்க வருந்தி நின்ற வறுமையினை விரட்டி அடித்து இழுவை வண்டி வழங்கிடவே ஆணையிட்டது;

சாதி மதப் பித்துகளில் சமத்துவம் சாவினைச் சந்திக்கும் போது சமத்துவபுரங்கள் கட்டி சகோதரத்துவம் கூட்டி வைத்தது; தன்னைத் தாங்கும் தமிழினத்தை தரணியிலே தன்மான எழுச்சி கொண்டே தடை பலவும் தாண்ட வைத்து சட்டங்களின் வழியே சரித்திரம் படைத்தது; இலவச மின்சாரத்தின் மூலம் உழுவோரின் எண்ணத்தில் ஓயாது மகிழ்வை விதைத்தது என எழுதுகோலின் மகிமைக்குள் தன்னை வெளிகாட்டிய கலைஞருக்கு நினைவாய் வைத்திடவே வேண்டாமா ஒரு பேனா?அப்படி வைக்காது போனால் தமிழினம் தான் தனக்கான உரிமையை விட்டுக்கொடாது என காண்பேனா? என்று கவிதை வரிகளுக்குள் எழுத்துக் கோட்டை கட்டி எல்லோரது உள்ளத்திலும் நினைவுச் சின்னம் அமைத்து விடுகிறது தேவயானியின் பேனா.

திரு இளையவன் சிவா

## நூல் அனுபவம்

சிலைகள் வைத்தலும் நினைவு மண்டபங்கள் அமைத்தலும் இயற்கைக்கு விளைவிக்கும் கேடு என்பவரையும் சிந்திக்க வைத்தே உலகாளும் ஓர் தலைமை; எல்லோர் உள்ளமதில் நிலையான உயிர்த்தன்மை கொண்டிட்ட கலைஞருக்கு நினைவுகளை அடைகாத்திடும் திறன் அதிகம் என்பதையும் உணர்த்திடும் வரிகளில் அழகு சேர்க்கிறது "கலைஞரின் பேனா" வழி கவிஞர் எண்ண ஒலி.

புறம் தள்ளிப் பேசுபவருக்கும் புகழ் மாலை பாடிடத் தோன்றும்படியான தன்னம்பிக்கையின் உழைப்பே கலைஞரின் வளர்ச்சிக்கு அடிக்கல் ஆனது. விடுதலை வேண்டி நின்ற அடிமை வேளையில் கடற்கரை மாவட்டத்தின் காவிரி கடைமடையில் இருந்து வீறு கொண்டு எழுந்து வந்த கருணாநிதியின் வீரமும் வீரத்தை தூண்டும் உரையும் அவரை அரசியலின் வழியே அறியச் செய்கிறது. எண்ணத்தைக் கச்சிதமாய் வார்த்தைகளாக்கி இதயத்தில் துளைத்திடும் ஈட்டி போன்றே எழுச்சியான உரைக்குள் வைத்து மக்களை எழுப்பி விட்ட பேச்சாளராய் வளர்ந்து நின்றார். கிடைத்திடும் வாய்ப்புகளில் சுணக்கமும் பிணக்கும் காட்டாமல் இணக்கமென ஏற்றுக்கொண்டு நினைத்ததை முடித்திட்ட செயல் வீரராய் தொண்டர்களுக்குக் காட்சி தந்தார்.

நாடகம் கட்டுரை கவிதை கதைகள் என இலக்கியத்தில் எழுதிக் குவித்தவை எண்ணிக்கை வைத்தாலோ நீளும் புத்தகத்தின் பக்கங்கள்.சொல்லில் பேசினாலோ இன்பத் தமிழால் நாவும் வலித்திடும் நீளங்கள். கலைத்தாயின் கரத்தில் இருந்தல்ல இதயத்திலிருந்து எழுதுகோலுக்கான மை வாங்கி எப்போதும் உள்ளத்தில் சுடர்விடும் ஏற்றமானவற்றை கை கொண்டு காவியங்கள் படைத்தவர்.

அரை நூற்றாண்டு அரசியலில் தேசமே பின்பற்ற எண்ணற்ற புதிய புதிய திட்டங்களை விதைத்தவர். விதைத்ததோடு நில்லாமல் மரமாக்கி மகிழ்ச்சியில் திளைத்தவர். ஏழை எளியவரின் துயர்நீக்கப் புறப்பட்ட சட்டங்கள் ஏராளம் அதைச் செயலாக்கிவிட புகுத்திட்ட வாய்ப்புகள் தாராளம். கண்ணீரைத் துடைத்திடவே காணும் திசையெங்கும் தொண்டர் படை கொண்டு கரங்களை நீட்ட வைத்து விட்ட கருணையை தனது நிதியாக்கியவர்.

அகவை என்பதை எங்களோடு நிறுத்திக் கொண்டு இளமையை எண்ணத்தில் புகுத்திக் கொண்டவராலேயே அறிவியலின் புது வரவுகளையும் கற்றுத் தேர்ந்திட

திரு இளையவன் சிவா

# கலைஞரின் பேனா

## நூல் அனுபவம்


அகவை என்பதை எங்களோடு நிறுத்திக் கொண்டு இளமையை எண்ணத்தில் புகுத்திக் கொண்டவராலேயே அறிவியலின் புது வரவுகளையும் கற்றுத் தேர்ந்திட முடிந்தது அதையே தமிழகத்தின் அடுத்த தலைமுறைக்கும் புகுத்திட துணிந்தது.

விடுபட்ட வரலாற்றை தொடுத்து இன்னும் நீட்டித்தே எழுதிச் சென்றால் கடலில் உறங்கும் காவலனுக்கு அலைகள் நீளும் கணக்கே ஆகிவிடும்.

ஊரின் அழகு தமிழின் பேரழகு ஆட்சியழகு தமிழகத்தின் தனிச்சிறப்பு என்ற தலைப்புகளில் தனிமனித வரலாற்றை எழுதப் புகுந்தவர் முடித்ததென்னவோ தமிழகத்தின் வரலாற்றை என்பேன்.

ஊரின் அழகில் மெச்சத்தக்க சில வரிகள்

தீங்கற்ற சொல் பேசும்
தீந்தமிழர் புடைசூழ
தீராத செல்வமிகு
திருக்குவளை உன் ஊராம்
ஒரு குவளைத் தண்ணீரில்
உயிர்வாழும் ஊர் இருக்க
திருக்குறளை மண்ணிலோ
தீராத நீர் இருக்க
ஊர் பொதிந்த நாடுனது நாடே.




தமிழின் பேரழகு என்ற தலைப்பில் சில வரிகள்

சேவித்து சேவித்து
செந்தமிழின் கூன் நிமிர்த்தி
சாவி கொண்டு பூட்டி வைத்த
சாத்திரங்கள் சாகடித்து
கூவிக் கூவிக் குரல் தந்த
கூர்மிகுந்த பேனா

வானுயர்ந்த கவி படைத்து
வாழுகின்ற தமிழ் குடித்த
வளையாத பேனா


திரு இளையவன் சிவா

# கலைஞரின் பேனா

## நூல் அனுபவம்

தமிழகத்தின் தனிச்சிறப்பு தலைப்பில் சில வரிகள்

இலக்கியத்தைப் படைப்பதற்கு
எத்தனைதான் போராட்டம்
இரவென்னும் அரக்கனுடன்
ஓயாமல் போர் செய்து
இருவிழியின் உறக்கத்தை
இரக்கமின்றி தூர் செய்து
எட்டாத கற்பனையைக்
கட்டி வைத்துக் காவலிட்டு
பஞ்சபூதம் நெஞ்சடக்கி
பார்வைக்குள் புவியடக்கி
கொஞ்ச நேரம் கொஞ்ச வரும்
குழந்தைகளின் மெய்யடக்கி
கூடிவரும் சொற்கூட்டம்
ஓடிவிடும் முன்னாலே
கூட்டெழுத்தில் பாட்டெழுதி
குறுக்கெழுத்தில் கதை எழுதி
மோட்டுவளை பார்த்துப் பார்த்து
முகம் எல்லாம் பித்தாகி
உறுபசியைப் புறந்தள்ளி
உயிருக்குக் கடன் சொல்லி
முறுவலிக்கும் வாய்மறந்து
மோனத்தில் தவமிருந்து
குறையாத தமிழ் எழுதி
கோடி முறை சரி பார்த்து
இரவாத வரம் பெற்ற
ஏடுகளை உருவாக்கி
பிறவாத பேர்களுக்கும்
பயனாகும் பொருளாக்கி
பல கோடி மனிதர்களை
ஆள்கின்ற பேனா.




திரு இளையவன் சிவா

## நூல் அனுபவம்

இப்படியாக தன்னையே கரைத்துக் கொண்ட தமிழர்களின் தலைவனுக்கு புகழ்மாலை சூட்டிடவே தேவயானியின் பேனாவும் கவிதையின் நூலாய் பிரசவித்தது. இவை எல்லாம் நூலுக்குள் ஒளிந்திருக்கும் கவிதையின் 'கரு'க்கள் அவற்றை உங்களுக்குள் ''உரு''க்கள் என காட்டிடவே எனது மனதின் கிறுக்கல் இவை.

100 ஆண்டை நெருங்கிச் சென்று தமிழ்த் தாயின் காலடியில் தன்னைத் தாங்கிக் கொண்ட அண்ணாவின் காலடியில் உறங்குகின்ற கலைஞரின் வரலாற்றை பக்கங்கள் இருபதில் முடிப்பது என்பது முயல்கின்ற காரியமா? முக்கடலைத் தேக்கி வைத்து ஒரு குடத்தில் அடைத்திடல் சாத்தியமா? என்றே வியக்கத் தோன்றும். ஆயினும் தமிழின் அற்புதச் சொற்கள் கொண்டு கருத்துப் பிழைகள் வராது எழுத்திலும் பிழைகள் நேராது எவ்வித வரலாற்றின் விடுபடுதலும் இல்லாது எல்லோருக்குள்ளும் முத்துவேல் கருணாநிதியை முத்தாக்கி ஒளிர வைத்திருக்கும் கவிஞரின் பேனாவுக்கும் கலைஞரே ஊற்றுவாய்; அவையே தமிழுக்கான தலையங்கத் தோற்றுவாய் என்று உலகத்தின் வாய் வழியே போற்றுவாய்.

அறிவியலின் அடுத்தடுத்த பாய்ச்சலினால் எழுதுகோல்கள் இடம்பெறாமல் எழுதிப் போடும் நூல்கள் தோன்றுகின்ற வேளையிலே எதிர்காலத் தலைமுறையினருக்கு பேனா என்பதற்கோர் அர்த்தம் சொல்லவாவது வைத்து விடுங்கள் நினைவுச்சின்னமென கலைஞரின் பேனாவை என வேண்டுகோள் விடுக்கிறது கவிஞரின் பேனா.

திரு இளையவன் சிவா

## நூல் அனுபவம்




சின்னஞ்சிறு கதையின்
சிங்கார உணர்வுள்ளும்
எத்தனையோ நினைவலைகள்
எண்ணில் அடங்காதவை
நினைவுகளை அசைபோடுவதிலும்
ஒரு தனி சுகம் தான் .
அதனின் வெளிப்பாடு தானோ என்னவோ
இதோ "வீடென்று எதைச்சொல்வீர் "

அந்த வெள்ளி நிலா முற்றத்தில்
மண்டுதிரையின் மீது அமர்ந்து
இங்குமங்குமாகப் புதைத்திருந்த
நினைவலைகளை ஒன்றிணைத்து
ஒலிம்பிக்கில் தங்கம் பெறத்துடிக்கும்
நாயகன் தான் நம் கதை ஆசிரியர்
திரு .ரஜகை நிலவன் அவர்கள்.

இந்த சிறுகதை தொகுப்பில் வரும்
சிறுகதைகள் யாவும் மனதை தொடுவதாக
உள்ளது . இந்த நிகழ்காலத்தில் இத்தகைய
சிறுகதைகளை படிப்பதே தனி சுகமான அனுபவம்தான் .

கதாசிரியரின் கதை சொல்லும் பாங்கு, எழுத்தாற்றல் , தமிழ்நடை
என் மனதை கொள்ளை கொண்டது போலவே இதைப்படிக்கும் எவருக்கும் ஏற்படும் எந்தவித ஐயமில்லை .
கதாசிரியருக்கு என் பணிவான வேடுகோள் இதுபோன்ற சிறுகதைகளை மேலும் மேலும் எழுதி கதை படிப்பதையே மறந்து கைப்பேசியில் மூழ்கியிருக்கும் இளைஞர்களை வாசிக்கும் பழக்கத்திற்கு திருப்புமாறு கேட்டுக் கொள்கிறேன் .

வாசகர்களை இந்த சிறுகதை தொகுப்பினை படித்து இன்புமாறு கேட்டுக்கொள்கிறேன் .

ரேவதி பார்த்தசாரதி, ஆசிரியை

# மணி திருநாவுக்கரசு

## கட்டுரை

### பிறப்பு, கல்வி



செங்கல்பட்டு மாவட்டம், மணிமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்த சுந்தர முதலியார்- வேதவல்லி இணையருக்கு 1888-ல் பிறந்தார். செங்கல்பட்டு நேட்டிவ் உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை கற்றார். சென்னை தொண்டைமண்டல உயர்நிலைப் பாடசாலையில் பத்தாம் வகுப்பு வரை பயின்றார். அங்கே தமிழ் கற்பித்த சிவப்பிரகாச ஐயரிடமிருந்து தமிழார்வத்தை அடைந்தார். பூவை கலியாணசுந்தர முதலியார், மறைமலையடிகள் ஆகியோரிடம் கல்விகற்றார்.

### தனிவாழ்க்கை

மணி திருநாவுக்கரசு நவநீதம் அம்மையாரை மணந்தார். இளமையிலேயே நவநீதம் மறையவே வாலாஜாப்பேட்டை கனகசுந்தர முதலியார் மகள் சரஸ்வதியை மணந்தார். அவருடைய மகன் சபாரத்தினம் கல்வியாளர். மற்றும் நான்கு மகள்கள் அவருக்கு பிறந்தனர்.

தொடக்கத்தில் ஜி.ஏ.நடேசன் புத்தகக்கடையில் கணக்குப்பிள்ளையாகப் பணியாற்றினார். பின்னர் குமாரசாமி நாயிடு அச்சகத்தில் பிழைதிருத்துநர் பணி செய்தார். வேப்பேரி எஸ்.பி.ஜி.உயர்தரப்பாடசாலையில் தமிழாசிரியராக பணிகிடைத்தது. பின்னர் முத்தியால்பேட்டை தமிழ்ப்பள்ளி தமிழாசிரியராகப் பணியாற்றினார். இறுதியாக பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக ஆனார்.

### இலக்கியவாழ்க்கை

மணி திருநாவுக்கரசு சைவம் சார்ந்தும் தமிழிலக்கியம் சார்ந்தும் சொற்பொழிவுகள் ஆற்றினார். நூல்களை உரையெழுதி பதிப்பித்தார்.நூல்களைத் தொகுத்தார். கல்லூரியிலும் தன் இல்லத்திலும் தமிழ் வகுப்புகளை நடத்தி மாணவர்களுக்குக் கற்பித்தார். மணி திருநாவுக்கரசு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பதிப்புகளில் ஆசிரியராக பணியாற்றினார். சேலை சகதேவ முதலியார் முதலியோரை கொண்டு தமிழ்ப்பாடநூல்களை எழுதச்செய்து வெளியிட்டார். மணி திருநாவுக்கரசு தனித்தமிழ் இயக்க ஆதரவாளர்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

### ஆர்?

"உலகுக்கெல்லாம் நல்லவனே" என்ற தலைப்பில் இவர தி இயற்றியுள்ள ஒரு சிறிய குழந்தைப்பாடல் இவருடைய எழுத்து இ வல்லமைக்குச் சாட்சியாகத் திகழ்கிறது.

பூவே உன்னைப் படைத்தவர் ஆர்?
புதுமணம் உள்ளே நுழைத்தவர் ஆர்?
பல பல நிறங்கள் பண்ணவர் ஆர்?
பார்க்க அழகு தந்தவர் ஆர்?
உன்னைச் செய்தோன் வல்லவனே
உலகுக் கெல்லாம் நல்லவனே

தனக்குத் தோன்றும் சந்தேகங்களை பூவிடமே கேள்வியாகக் கேட்கும்படியாக இந்தக் குழந்தைப் பாடலை இவர் இயற்றியுள்ளார். ஒரு பூவிற்கு உரித்தான மணம், வண்ணம், அழகு போன்றவற்றைச் சொல்லி அவற்றை உண்டாக்கியவர் யார் என்று கேள்வியையும் கேட்கும்படியாகச் செய்கிறார். கேள்வியே ஞானத்தை வளர்க்கும். அறிவைப் பெருக்கும்.

### அமைப்புகள்

சைவத்தையும் தமிழையும் பரப்பும்பொருட்டு மணி திருநாவுக்கரசு உருவாக்கிய அமைப்புகள்

- பாலசைவர் சபை
- வாகீசர் சபை
- மாணிக்கவாசகர் சபை
- இந்துமத பாடசாலை
- சித்தாந்த பிரகாச சபை
- தமிழர் சங்கம்




### இதழியல்

மணி திருநாவுக்கரசு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் இணைந்து செந்தமிழ்ச் செல்வி இதழின் உருவாக்கத்திலும் வெளியீட்டிலும் ஈடுபட்டார். மாசிலாமணி முதலியாருடன் இணைந்து 'தமிழரசு' இதழை நடத்தினார்

திரு அ வில்சன், இதழாசிரியர்

## இலக்கிய இடம்

மணி திருநாவுக்கரசு தமிழ்க்கல்வி, தமிழ்வழிக்கல்வி ஆகியவற்றுக்கான பாடநூல்களை உருவாக்கியவர் என்னும் அளவில் முதன்மையாக மதிக்கப்படுகிறார்.

## நூல்கள்

- பாவலர் ஆற்றுப் படை
- அறநெறி விளக்கம்
- புலவர் கதை
- திருக்கண்ணப்பன்
- குமணன்
- இராசராசன்
- சண்பகவல்லி
- செந்தமிழ் வாசகம்
- பட்டினத்துப் பிள்ளையார் அல்லது தவராசர்
- தொகுப்பு
- பாமணிக் கோவை
- உரைமணிக் கோவை




## நன்றி

குழந்தை இலக்கிய முன்னோடிகள், ஆர்.வி.பதி
https://tamil.wiki

# நாளை நமதே

முடிவே இல்லாத

ஒரு வார்த்தை

முயற்சி

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com